# அருணாசலபுராணம்

## ஆனைமுகன் துதி

**(கலிவிருத்தம்)**

மிக்க வேத வியாசர் விளம்பிய
இக்க தைக்குஇயைபு இன்றுஅருள் செய்திட;
முக்கண் வெற்பினை, மும்மத வாரியை,
கைக்க ளிற்றினைக் கைதொழுது ஏத்துவாம். 1

## நடேசர் துதி

**(வேறு)**

முதிருஞ்சுவை மதுரம்பெற மொழியும்தமிழ் விரகன்புகழ்
பதிகம்புனை பவன்;நம்பினர் பவபஞ்சனன்; அமலன்;கதிர்
உதிரும்படி, பகிரண்டமும் உடையும்படி, இலகும்படி
அதிரும்படி நடனம்புரி அதிருங்கழல் அதிருங்கழல். 2

## தலப் பெருமை

**(அறுசீரடி ஆசிரியவிருத்தம்)**

இரவிகள், சந்திரர், வயிரவர், விஞ்சையர், இமையவர், எண்திசையோர்
உரகர், அருந்தவர், முனிவரர், பங்கயர், உவணநெ டுங்கொடியோர்,
பரவி நெருங்கலில், உலகம் நிறைந்தவர் பணியும் இடங்கிடையாது
“அரகர” என்பது கடலில் முழங்கியது, அருணை வளம்பதியே. 3

இளமுலை மங்கையர் முகமும் நெருங்கிய இருகுழை யும்,பகலே
ஒளிர்ஒரு சந்திரன் உடன்இரு செங்கதிர் உதயமெ னும்தனியூர்,
தளைஅவி ழுந்தொடை மகபதி தன்பதி, தனபதி தன்பதியாம்,
அளகை வளம்பதி தனிலும் வளம்பதி அருணை வளம்பதியே. 4

காலன் எதிர்த்திட மார்பில் உதைத்தவர், காமன் உருப்பொடியா,
ஆலம் மிடற்றினர், மாலை மதிக்குறை ஆடுஅ ரவப்பணியார்;
நாலு முகத்தவன் ஞாலம் அளிப்பவன் நாடும் அதற்குஅரியார்,
சூலம் எடுப்பவர் மேவு திருப்பதி சோண கிரிப்பதியே. 5

## பரசிவ துதி

**(சந்தக்கலி விருத்தம்)**

உறவொடு பகையறும் ஒருமுதல் அவன்எவன்?
இறுதியில் உலகருள் இறையவன் அவன் எவன்?
மறைமுடி வினில்நடம் வளர்பவன் எவன்? எவன்
அறிவினில் அறிபவன்? அடியிணை தொழுதனம். 6

## மண்டபத்தின் எழில்

இந்திரநீ லச்சிலையால் இசைந்தகடந்
தெரியாமல் எழுதிச் சேர்த்து,
மந்தரமாம் எனவயிரத் தூண்நிறுத்தி,
மாணிக்க மதலை கூட்டிச்
செந்துகிரால் போதிகையும், மரகதத்தால்
உத்திரமும் செறித்து, மீதே
சந்திரகாந் தத்தகடு பரப்பியமண்
டபம்உளது,அச் சயிலம் மீதே. 27

## நந்திகேசுரர் அமர்ந்திருந்த கோலம்

இருமருங்கும் தரளமணி இழைத்தஅரி
ஆசனத்தில் இருந்து, நீலப்
பருமணியால் இழைத்தபெரு பாதபீ
டிகையின்மலர்ப் பதத்தை ஊன்றி,
மருவுபெருங் கயிலையின்மீது இருந்துமுய
லகன்முதுகில் வலத்தாள் ஊன்றி,
அருமறையை முனிவரருக்கு உரைக்கும்இறை
எனஇருந்தார், அந்த வேளை. 28

## நந்திகேசுரரைச் சூழ்ந்திருந்தோர்

குற்சன்,உரோ மசன்,குமுதன் குமுதாக்கன்,
சகடாயன், கும்ப சாதன்,
வற்சர்,வைசம் பாயனன்,க ணாசிமுனி,
புலிக்காலன், வாம தேவன்,
நற்சனகன், சனற்குமரன், வாதரா
யணன்,மதங்கன் நடனத் தாளை
அர்ச்சனைசெய் அனந்தமுனி முதல்அனந்த
முனிவரர்தம் அருகில் சூழ. 29

## மார்க்கண்டர் முத்திக்கு உபாயம் வினவல்

மன்னியமார்க் கண்டமுனி உடன்எழுந்து
பணிந்து,உயிர்கள் மழைமின் போலே
இந்நிலத்தில் பிறப்பதுவும் இறப்பதுவும்,
இருவினையும் எமக்குத் தோன்றச்
சொன்னஒரு தனிமுதலே! முத்திபெறும்
பரிசுஎமக்குச் சொல்வாய்! என்றான்;
அன்னவுரை செவிப்புகலும், நந்திஅருள்
சுரந்து,முனிக்கு அருள்வ தானான். 30

## கார்த்திகை தீபம் பூமாதேவியின் மகுடமணியை ஒக்கும்

வெண்மைசேர் புயல்அதன் அடியில் மேவுதல்
எண்மகிழ் கயிலைமீது இருப்பது ஒக்குமால்;
தண்மைசேர் கார்த்திகை விளக்கு சாற்றுதல்
மண்மகள் மகுடமா மணியில் தோன்றுமே. 56

## இமையத்தின் மகிழ்ச்சி

அன்றுமால் திசைமுகன் அளவி டாமுதல்,
மன்றல்சேர்ந் திடுமலை வடிவு கொள்கையால்,
நன்றுநம் மருகனும் நாமும் ஓர்குலம்
என்றுஉளம் மகிழ்ந்ததே இமைய பூதரம். 57

## சூரிய சந்திரனின் கிரிவலம்

பன்னிரு திங்களும் பரிதி யானதும்
மன்னிய மதியமும் வலம தாய்வரும்;
அந்நிலை உரைக்கஎன் அறிவு போதுமோ?
உன்னிய ஆசையால் உரைக்கல் உற்றனன். 58

## எண்திக்கு அதிபதிகளின் தோத்திரம்

அர்க்கமா மலைஉளது அடுத்த கீழ்த்திசை;
நற்கண்ஆ யிரத்தவன் நண்ணி வாழ்த்துவன்.
தெற்கிலே உளதுபுத் தேளிர் மாமலை;
பொற்கைஅந் தகன்தினம் புகழ்ந்து போற்றுவான். 59

மேல்திசைத் தண்டமா விலங்கல் உண்டு;அதில்
சேல்திசை வருணன்முன் செங்கை கூப்புவன்.
தோற்றிடும் வடதிசைச் சூல மால்வரை;
போற்றிய அளகையான் பொருந்தி வாழ்த்துவான். 60

மற்றுநால் வரைகளில் வாயு, தீயவன்
நெற்றிசேர் விழியவன், நிருதி போற்றுவன்.
சுற்றுள மலைதொறும் சுரரும் சித்தரும்
உற்றசீர் வசுக்களும் உறைந்து போற்றுவார். 61

## ஸ்ரீ பார்வதி தேவி இடப்பாகம் பெற்றது

தன்னையே நிகரும்அத் தலத்தி லேபுவிக்கு
அன்னை,மா தவம்புரிந்து அதிக மாகவே
என்னைஆள் உடையவன் இடம்க லந்தனள்.
பின்னையும் அதின்நலம் பேசல் ஆகுமோ? 62

## ஸ்ரீ பார்வதியின் பணிவிடை
### (அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்)
### (வேறு)

வையநீர்க் கங்கை பாயும் பனிவரை மருங்கின், அந்நாள்
துய்யநீர்ச் சடையான் வந்துஅங்கு ஓர்தவம் தொடங்கக் கேட்டு,
வையகம் அளித்தாள் தாதை, வள்ளலைப் பணிந்து, “மானை,
ஐய!நின் தவத்துக்கு ஏவல் கோடி”என்று அளித்துப் போனான். 205

ஓங்குமால், அயன்,மற்று உள்ளோர் ஒழிவுஇலாத் தவம்பு ரிந்தால்
தாங்குபேறு அளிப்பான், தான்ஓர் கருத்தினால் தவம்செய் போதில்,
பூங்குழல்,கனியும், போதும், முஞ்சியும், புனலும் கொண்டு,
பாங்கியர் பலரும் சூழப் பணிவிடை பலவும் செய்தாள். 206

## பிரமனிடம் தேவர்கள் சென்றது

இங்குஇவை இருக்கத் தேவர் யாவரும் இமையோர் கோவும்
பங்கயத் தவனை எய்திப் பணிந்தனர்; பதுமத் தோனும்
அங்குஅவர்க்கு இருக்கை ஈந்தான்; அவர்அவர் முகத்தில் சோர்வும்
குங்குமக் குழம்பு நீத்த புயங்களில் குழைவும் கண்டான். 207

## தேவர்கள் பொலிவிழந்த நிலை

வச்சிரம் ஒடிந்துஈ சானன் கணிச்சிவாய் மடிந்தும், காலன்
முச்சிரம் வளைந்தும் மற்றோர் படைஎலாம் முறிந்தும், தேவர்
மெய்ச்சிர மகுடம் நீத்தும் மெலிந்தமை விளம்பும் என்றான்;
அச்சுரர் தமக்குக் கோமான், தாரகன் அழித்தான் என்றான். 208

## பிரமன் கூற்று

காலைஅம் புயத்தோன் சொல்வான்; காலனால், கனலால், காற்றால்,
மாலினால், என்னால், உன்னால், அவன்வலி தொலைக்க லாமோ?
ஆலமா மிடற்றான் சேயாய், அசலமாது இடத்தே தோன்றும்
வேலனார் வெல்வார்; உங்கள் சிறைஎலாம் விடுப்பான் என்றான். 209

யோகத்தில் இருக்கும் ஈசன் உமைக்குநாண் தரிக்கு மாறு
வேகத்தில் இயற்றும் என்றே அயன்விடை கொடுத்தான்; மீண்டும்
மாகத்தில் அணுகித் தேவர் மதனனை நினைத்தார்; மாரன்
சோகத்தை ஒழிக்கும் தென்றல் தேருடன் தோன்றிச் சொல்வான். 210

## சிவன் தவத்தை அழிக்க மன்மதனை வேண்டல்

எவன்தவம் அழிக்க? மாதர் எவர்களை மயக்க? நீவிர்
கவன்றதுஎத் துயரால்? எம்மை அழைத்ததுஎன் கருமம்? என்றான்;
அவன்தனை இறுகப் புல்லி, அமரர்கோன் அருளின் நோக்கிச்
சிவன்தவம் அழிக்க வேண்டி அழைத்தமை தெரியச் சொன்னான். 211

நெஞ்சுஉருகி மாதவர்கள் நின்றுஇவை புகழ்ந்தார்
வஞ்சிஇடை, கோதமனும் வந்தனன்; வரும்போது
அஞ்சலிபு ரிந்தனள்; அதற்குமுன மேமின்
கஞ்சமலர் என்னும் இரு கால்களில் விழுந்தான். 323

அன்பில்உயர் கோதமனும், அன்னையை வணங்கி,
இன்புஉற உரைப்பன்:“அயன், எண்திசை புரப்போர்
தன்சிரம் மிதிக்கரிய தாள்இணைகள், இன்றுஎன்
புன்குடில் மிதிக்கஎன புண்ணியம் முடித்தேன்? 324

## உமையின் உரை

இந்தமொழி சொற்றலும், இளங்கொடியும், “வேலன்
தந்திஇடை சென்றிடுவன்; அங்குஅது தவிர்ந்தால்
சிந்தைமகிழ் உன்இடையில் வந்துகுறை தீர்வேன்
மைந்த!”என ஓதினள்; மறுத்தும்இவை சொல்வாள். 325

நாயகன் மொழிந்திட நடந்தபடி எல்லாம்
பாயிரம் எனும்படி பகர்ந்தனள்; எவர்க்கும்
தாய்இவை மொழிந்தஅள வினில்,சத மகற்கன்று
ஆயிரம் விழித்திரள் அளித்தமுனி சொல்வான். 326

## “தலேச்சுரத்தில் இடப்பாகம் கிடைக்கும்” என்றது

“இத்தலம் முதல்தலம்; இதன்பெயர் தலேச்சரம்;
உத்தமம்; இதில்தருமம் ஒன்று,பல ஆகும்;
மெய்த்தவம் இயற்றிடில், வெள்விடையின் மேல்வந்து
அத்தனும் இடப்புறம் அளித்துஅருளும்” என்றான். 327

“மால்,அயன், வசுக்கள்,மக வான்,முனிக ணத்தோர்;
சாலைகள் சமைத்ததில் தனித்தவம் முடித்தார்;
காலம்இடம் நன்று,செயல் கைப்பலம்இது” என்றான்;
மூலம்முதல் வல்லியும்,“முடிப்பன்இது” என்றாள். 328

## தேவியின் தவம்

### (எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்)

கோதமனே முதலாய முனிவர்க்கு எல்லாம்
குளிர்ந்தமொழி பகர்ந்துவிடை கொடுத்துச் சோண
பூதரமாம் அதன்குணபால், பன்ன சாலை
புதிதுஅமைப்பித்து அகம்மகிழ்ந்து, புறம்பு காக்க
மாதர்எழு வரைஅமைத்து, நாலு பாலின்
வாயிலைஎண் வயிரவர்கள் மகிழ்ந்து காக்க
ஆதரவின் நிறுத்திமைந்தர் மருங்கு காக்க,
அந்தரிஉள் புறம்காக்க, அமைத்தாள் மன்னோ. 329

“உறுதுணை உமையே!” என்னும் பொழுதில்,யோ கினிகள் வானில்
அறுபது நாலு கோடி அதிர்ந்துஎழுந்து, அழலின் மாரி
இறுதியாய் உருளச் சேனை இடிமழை சொரிகை யாலே
குறுகிய மகிடன் சேனைத் தலைவரும் கொதித்துச் சென்றார். 356

## ஏழுமாதர்கள் அசுரர்களைக்கொன்றது
### (கலிவிருத்தம்)

அருசி கன்றனைச் செற்றனள் ஆரணி;
மருவு காந்தனை மாய்த்தனள் வாரணி;
கரனை வென்றனள் வேல்உடைக் காரணி;
நரகன் ஆர்உயிர் உண்டனள் நாரணி. 357

சூல பாணி தொலைத்தனள் மிண்டனை;
கோல மாமுகி சண்டனைக் கொன்றனள்;
ஆல ஊணி மதுவை அழித்தனள்;
நீலன் ஆர்உயிர் இந்திரை நீக்கினாள். 358

துந்து மிக்கொடி சோணித ஊணனைக்
கந்து மிக்கும் படிக்கதை காட்டினாள்;
நந்து மிக்கு நிகர்த்தஅரு ணாசலை
வந்து மிக்குளரிக் கண்ணனை வாட்டினாள். 359

## துர்க்கை மகிடாசுரனை எதிர்த்துவருதல்

கயிட வன்புகைக் கண்ணன் இருவரும்
செயிரின் மாளுறச் சிந்தினள் சுந்தரி;
நெயிடு மிக்க நிணம்இடு வேலினள்
மயிட வன்முகம் கண்டுஎதிர் வந்தனள். 360

வெம்க டாமுகன் மேவலும், மாதர்கள்
தங்கள் ஆயுதம் கொண்டு தடுத்தனர்;
சிங்க ஊர்தி அவன்எதிர் சென்று,கைச்
சங்கை ஊதினள் மேரு சலிக்கவே. 361

## துர்க்கை போர்

செருவில் அங்குஅவள் சங்கொலி செய்திட,
ஒருவர் இன்றி அவுணர் உறங்கினர்;
பெருவ ரங்களில் பெற்ற சரங்களை
இருவ ரும்சொரிந் தார்மழை என்னவே. 362

# 6. வச்சிராங்கத பாண்டியச் சருக்கம்

## பாண்டிய வளநாடு

**(கலிவிருத்தம்)**

தோடுகமழ் சந்தன வனத்திடை துளைந்தே,
நீடுதழ் இன்சுவை அளைந்து,நெடு நாளாய்,
ஆடுமயில் அன்னவர்கள் அன்னநடை போலே,
வாடைமிசை தென்றல்புகும் வையைவள நாடு. 403

வெவ்இருக ணார்இடையை மின்என மருண்டே,
செவ்விபெறு கேதகை செறிந்துஅலரும் நாடு;
நவ்விஅனை யார்அளகம் நள்இருளது என்றே,
மவ்வல்அரு கேஅலரும் வையைவள நாடு. 404

## பாண்டியன் பெருமை

அந்தவள நாடர்பெரு மான்,அரசர் கோமான்,
இந்திரன் முடிக்கிடை எறிந்தவளை வீரன்,
நிந்தைஅகல் தென்கயிலை நெற்றிவிழி போலே,
முந்திய திசைக்கரி முகத்துஎழுதி வைத்தோன். 405

## பாண்டியன் பண்புநலம்

ஆகம் ஆதி, மதனின் அழகினான்;
ஆக மாதி, தெளிந்த அறிவினான்;
பாகம் நாரியர் பத்தியி னான்,மொழிப்
பாகுஅம் நாரியர் பற்றிய தோளினான். 406

வான கத்திலும் மண்ணிலும் எண்இம
வான்அ கத்திலும் வைத்த புகழினான்;
கான கத்துஒளி ஆர்சடைக் கண்ணிதன்
கான கத்துஒளி யாமணைக் காப்பவன். 407

தங்கள் நாயக னைத்தலை சூடிய
எங்கள் நாதர் அடித்தலை ஏத்தினான்;
பொங்கு நன்றி அறிந்துஅது போற்றுவார்
இங்குஇ வற்குஇணை யாவரும் இல்லையே. 408

## அருணைவளமும் மக்கள் செயலும்

நீதியாய்ப் புலியும் பசுவும்ஓர் துறையில்
நெருங்கியே புனல்உண்டு வசிக்கும்;
போதனை அருளும் வேதியர் மறையைப்
புகன்றிட யாவரும் கேட்பார்;
ஆதியாம் கடவுள் அருள்பெற நகரை
அலங்கரித்து அற்புதம் செய்வார்;
வீதியில் புனலைத் தெளித்துமின் னார்கள்
மேம்படு கோலமும் இடுவார். 456

மாதம்மும் மாரி சொரிந்து,வே ளாண்மை
மாறுஇலாச் செழிப்புஉற விளையும்;
சாதம்என் போரை அக்கணம் அழைத்தே
தழைக்க ஷட்சுவை அமுதளிப்பார்;
மாதவர்க்கு ஏவல் புரிந்துஅவர் கேட்கும்
வகைஎலாம் தந்துஅருள் பெறுவார்;
நீதன்ஆ லயத்தில் நெய்விளக்கு அமைத்து
நிரந்தரம் பூசித்து வருவார். 457

## வல்லாளனுக்கு சந்ததியில்லை என்ற கவலை

### (கலிவிருத்தம்)

இந்த வண்ணம் இறைவன் விதிப்படி
அந்த மாநகர் ஆனதுஇ லங்குநாள்,
எந்தச் சீரும் இருக்க,மன் பேர்சொல
சந்த திஇல்லை என்று தளர்ந்தனன். 458

## என்பணிகளில் குறையோ?

ஐயன் பூசை யதில்குறை வோ?இந்த
வையம் நீதியில் மாறுஉளதோ? அன்றிக்
கொய்யு மலர்களில் கோதுஉறச் செய்தனோ?
செய்யும் வண்ணம்என்? செப்பும் அமைச்சரே! 459

## அறஞ்செய்தால் மகவு உண்டாம்

அண்ண லேநமை ஆதரித்து ஆண்டிடும்
கண்கள் மூன்றுஉடை யான்நல் கருணையால்,
நண்ணும் ஆதுலர் யார்க்கும்நல் அன்புடன்
திண்ண மாய்அறம் செய்யில், சுதன்உண்டாம்; 460

## எதுகேட்டாலும் வழங்குவோம்
### (அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்)

சுந்தர அருணை நாதர் துலங்கும் இந்நகரின் உள்ளே,
வந்தவர் எதுகேட் டாலும் வழங்குதும்! எனஇப் போது
அந்தரம் அளாவ, நீங்கள் அழகிய துவசம் நாட்டி,
எந்தம்நல் பெயர்வி ளங்க,எழின்முரசு அறையச் செய்மின்! 461

## அமைச்சர்கள் கூற்று

தாத்திரி முற்றும் நற்சீர் தழைக்கும்எம் கோனே! கேண்மோ!
சாத்திரம் புகழும் ஈசர் தாள்தொழும் தொண்டர் மூப்பர்
தோத்திர இரவ லோர்கள் தோன்றிய வண்ணம் ஈயப்
பாத்திர ரோநாம் என்று பகர்ந்தனர் அமைச்சர் ஆனோர். 462

## உலகில் இலாப் பொருளைக் கேளார்.

பூவிலாப் பொருளைக் கேட்கப் போகுமோ? கேட்கில், அவ்வாறு
யாவரா யினும்தான் நல்கார்; ஆதலால் புகன்ற வண்ணம்
தீவிரமாகச் செய்வீர் எனத்துவ சத்தை நாட்டித்
தேவநா டளவும் ஓங்கச் செயமுரசு அறைவித் தாரால். 463

## அருணையின் அறக்கொடி நாடிவந்தோர்
### (எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

நாதன்வாழ் அருணை நகரினில், வேந்தன்
நாட்டிய துவசத்தை ஓர்ந்து,
பூதலத்து உள்ள விருத்தர்கா வடிகொள்
பூரியர், உடன்மிகச் சிறந்த
மாதவர், மறையோர், ஜோகி ஜங்கமர்கள்
வாணர்கள் யாசகர் யாவரும்
நீதமாய்த் திரளாய் எய்தியன் னோர்கள்
நிலைபெறப் பரிசினை அடைவார். 464

## யாவர்க்கும் பொன்
### (அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்)

வதுவைசெயப் பொன்வேண்டி வந்தோருக்கு
ஆயிரம்பொன் வழங்கிப் பின்னும்
கொதுவைமனை, நிலம்,பணிதி, கொற்றவனே!
அதைமீட்டுக் கொடும்என் றோர்க்கு,அத்
ததியில்ஈ ராயிரம்பொன் தந்துஅவரை
மகிழச்செய்து அதன்பின், ஆங்கு
முதுமறையோர் உபநயனம் முடிக்கஎன்றால்
அவர்க்குநிதி முந்நூறு ஈவான். 465

## வசிஷ்ட தீர்த்தம்

தனபதி தடத்தைச் சேர வசிட்டனார் தடம்உண்டு; அந்த
முனிவர்,ஐப் பசியின் மூழ்கி முனிவரில் தலைமை பெற்றார்;
அனையதில் மூழ்கி னார்கட்கு அங்கமும் செங்கை நெல்லிக்
கனிஎன விளங்கும்; பாவக் கடலதும் கடப்பர் அன்றே. 530

## தேவர்கள் நீராடிய தீர்த்தங்கள் பல

கங்கைவேல் குமரன், ஆனை முகத்தவன், கதிரோன், வெற்பின்
மங்கை,ஓர் வடுகன், கன்னி, மதியம்எண் வசுக்கள், வெள்ளைப்
பங்கய மடந்தை, தேவர் குடைதடம் பலவும் சூழும்;
அங்கதோர் தடத்தின் மேன்மை மறைகளும் அறிவுறாவே. 531

## திருநதி, சோணநதி

ஒருநதி தானும் ஒவ்வாத் திருநதி வடபா லாக;
வருநதி முழுகிப் பூமான் மாயவன் உரத்தில் சேர்ந்தாள்;
நருமதை பரவும் சோண நன்னதி தென்பால் தோன்றும்;
சுரநதி யமுனை பொன்னி படிந்துதம் துயரம் தீர்ந்தார். 532

## புண்ணியநதி

புண்ணிய ஆறு தெய்வ மலைக்குமேல் திசையில் பொங்கும்;
நண்ணிய புண்ணி யாற்றூர் என்றுபேர் நகரம் தானும்;
எண்ணிய நதியின் மூழ்கி ஈழன் எ(ற) அரசன் தீங்காம்
பெண்ணியல் வடிவம் தீர்ந்தான்; வடிவமும் பேறும் பெற்றான். 533

## சேயாறு

திருந்துசே யாறு முன்சொல் திருநதி வடபால் தோன்றும்;
பொருந்தவேல் எறிந்த செவ்வேள் அழைத்தஅப் புனித நீரில்,
அரும்திகழ் அயிலோன் மூழ்கி, அசுரரைத் தொலைக்கும் சீரும்,
மருந்துஅயில் அமரர் சேனா பதிஎனும் வரமும் பெற்றான். 534

## சிவகங்கை

நிருத்தர்ஆ லயத்தின் உள்ளே சிவதடம் உளது; நித்தம்
கருத்தினால் நினைத்தால், தெய்வக் கங்கையில் படிந்தது ஒக்கும்;
உருத்திரர் பலரும் மாசி மகத்திலே உகந்து மூழ்கி,
எருத்தினில் இருந்து தேவர் எவரினும் ஏற்றம் பெற்றார். 535

## கன்னியைத் தானமாய் அளித்தோர்-பலன்

கன்னியைத் தான மாய்அக் கரைதனில் அளித்தோர், தேவர்
பொன்னியல் உலகில், போக பூமியில், அளகை நாட்டில்,
மின்திகழ் மலரோன் நாட்டில், விரும்பின நுகர்ந்து தேவர்
சென்னியால் வணங்கிப் போற்றச் சிவபதத்து இருப்பர் அன்றே. 542

## அருணையில் அன்னதானப் பலன்

உத்தம தலத்தில், கோடி அருந்தவர்க்கு உதவும் அன்னம்,
நித்தமாம் காசி மீதுஓர் அவிழ்ப்பலன் தனக்கு நேராது ;
அத்தலத்து அனந்த கோடி அருந்தவர்க்கு உதவும் அன்னம்,
சத்திய அருணை நாட்டில் அவிழ்ப்பலன் தனக்குஒவ் வாதே. 543

## அரனுக்கு இடபதானம், அந்தணர்க்குப் பூமி தானம் செய்தலின் பலன்

ஆஅடி அளவு பூமி அந்தணர்க்கு அளித்தோர், ஈசன்
சேஅடி நிழலில், தங்கள் கிளைஉடன் செருக்கி வாழ்வார்;
மாவிடை அரற்கு விட்டோர், மற்றுஒரு விடைமேல் ஏறி,
மேவிடும் சிவலோ கத்தில் பவனிபோய் வியப்பர் அன்றே. 544

## மரம் நடல், நந்தவனம், கிணறு, குளம், அமைத்தோர் மெழுகி விளக்கிட்டோர் அலங்காரம் செய்தோரின் பலன்

சாலைகள் சமைத்தோர், நந்த வனம்சமைப் பித்தோர், கேணி
கூலமார் தடங்கள் கண்டோர்; குலிசனார் பதத்தில் சேர்வார்;
ஆலயம் மெழுகித் தூர்த்து விளக்கிட்டோர், அலங்க ரித்தோர்,
வேலையின் நடுவில் பாந்தள் மெத்தையில் துயில்வர் அன்றே. 545

## தண்ணீர்ப்பந்தல் தருமம், ஆடை வழங்குவார்-பலன்

மகிழ்ப்புனல் அரிதுஆம் நாளில், மருவுநீர்ப் பந்தர் வைத்தோர்,
செழிக்கும்மேல் பதவி தன்னில் தேவரும் துதிக்க வாழ்வார்;
புழைக்கைமா உரியர் அன்பர்க்கு அணிகலை புனைவித் தோர்,ஓர்
இழைக்குஅளவு இறந்த காலம் இறைபதத்து இருப்பர் அன்றே. 546

## மடங்கட்டியோர் பலன்-பிதிர்யாகம் செய்தோர் பலன்

மடம்சமைத் தவர்கள் அந்த மடத்தில்ஓர் துகட்குஓர் கற்பம்
இடம்பிடித்து அழியா வீட்டில் இருப்பர்;வேறு இறந்த பேர்க்கும்
விடம்குடித்து இறந்த பேர்க்கும் விதியினால் உறுதி வேள்விக்
கடன்கழித் தனரேல், அந்தக் குலம்எலாம் கதியில் சேரும். 547

# 10. ஆதித்தச் சருக்கம்

## சோணகிரியை நிந்தைபேசுவோர் இடர்ப்படுவர்

**(அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்)**

அற்றம் அற்ற முனிவர் சூழும் அருண பூதரத்துடன்,
மற்ற வெற்பும் ஒக்கும் என்றுஇகழ்ந்து ரைத்த மனிதர்வாய்,
புற்றுஎ ழுந்து புகைஎழுந்து, புழுநெ ளிந்து, புலவுநீர்
கற்றுஎ ழுந்து பெருகுமண்டு சோரி மாரி சொரியுமே. 587

அந்த மைந்தர்தம்மை எற்றி, அந்த கன்தன் ஏவலால்
வந்த தூதர் செக்கில் இட்டு, அரைத்து அரைத்து, எடுப்பர்,வாய்
வெந்த வாளி னால்அ றுப்பர்; “எந்தை சோண வெற்பையோ
நிந்தை செய்வை” என்றுஅடித்து, நெய்யில் வேக வைப்பரே. 588

பஞ்செ ழுத்து வைத்துஅரக்குஉ ருக்கி, வாய்ப ரப்பியே,
நஞ்சி னைப்பு கட்டி, வெய்ய நரகிலேகி டத்துவார்;
அஞ்சி அந்த நரகு தானும் அருவருத்துஅ லைத்திடும்;
நெஞ்ச கத்தில் எண்ணினார்த மக்கும் ஈது நிகழுமே. 589

குருக்கள், தந்தை, தாயர்ஆவி கொன்ற தீயர் முதலினோர்
இருக்கும் வெய்ய நரகின்மீதின் இட்ட போதில், அவர்களும்
பெருக்க நொந்து “பாவி” என்று பேசுவார்கள் தம்உடன்
சரிக்கொ ணாது, தள்ளும் என்று தங்கள்கண்பு தைப்பரே. 590

என்றுஉ ரைத்து, நானும், வையம்ஏழும் உண்ட மாலுமாய்,
அன்றும் இன்றும் அளவுஇ டாதஅருண பூத ரத்தைஓர்
குன்றம் என்றுஇ கழ்ந்து, சென்று குன்றி,மெய்கு றைந்து,முன்
கன்றி னான்ஒருத்தன், என்று கதைவி ளம்பல் ஆயினான். 591

## நான்முகன் சூரியன் கதையைச் சொன்னது

உலவுகின்ற சோதி யாவும் உள்ளில் வைத்து,இவ் உலகில்ஓர்
மலைய துஆகி நின்றதெய்வ மலையை, மற்ற மலைகள்போல்
அலகு பெற்ற இரவி எண்ணி ஆழிஒன்று வாசிஏழ்
இலகு தேர்அம் மலையின் உச்சி எல்லையாய்ந டத்தினான். 592

## சூரியனுடைய தேரும் குதிரைகளும் அழிந்தன

முகுந்தர் தேடும்அந்த வெற்பின் முடியின் மேவும் முன்னமே,
மிகுந்த சோதி உள்ளினும்வெ டித்துஎ ழுந்து வெம்மையாய்
புகைந்து செல்ல, இரதம் மூவர் புரம்எனப்பொ ரிந்ததே;
உகைந்த பச்சை வாசி யோ,உலர்ந்த வாசி ஆனதே. 593

### மாயவன் உறக்கத்தைக்கண்ட யோகியர் பரமனை நினைத்தது

கற்பமுடி வாய்இருள் பெயர்ந்துபுலர் காலத்து,
அற்பஇருள் நின்றதுமுன் னான்இறையி னாலே;
சொற்பரவை மாயன்உண ராதுதுயில் கொள்ளச்
சிற்பரம யோகியர்கள் செம்மலை நினைந்தார். 630

### சோதிவடிவால் உலகம் உண்டாயது

அத்தன்அடி யார்கள்தமது ஆணவம் அறுக்கும்
சுத்தன்அழல் ஆனதுஒரு சோதிவடிவு ஆனோன்;
எத்தலமும் எத்திசையும் எங்கும்வெளி ஆனோன்,
உய்த்தபொறி தம்மில்உள வாயஉலகு எல்லாம். 631

### மாயவன் பயத்துடன் எழுந்தது

ஊழிமுடி வாய்இருள் புலர்ந்தும்உண ராதே,
ஆழிமிசை யின்துயிலும் அச்சுதனை எய்தி,
வாழிஎன யோகியர் எழுப்புதலும், மாயன்
பாழியிலும் நின்றுஅதி பயத்துடன் எழுந்தான். 632

### மாயன் அருணாசலேசுரரை நினைத்தது

வையகம் அளிக்கமல ரோனைஉத வாதே,
பைஅரவின் மிக்கதுயில் கொண்டபரி சாலே,
வெய்யபுன் வினைத்தொழில் விளைத்தனன்; எனத்தன்
ஐஉணர்வு அஞ்சி,எனது ஐயனை நினைந்தான். 633

### அருணாசலேசுரர் காட்சி தந்தது

அன்பர்கரு தில்,கடுமை யாகிஎதிர் வந்தே
துன்பம்அகல் விக்கும்அது தூயதொழில் ஆனான்,
வன்படிக வெற்புமிசை மன்னுசுடர் போலே,
மின்படரும் மேனியுடன் வெள்விடையில் வந்தான். 634

### மிக்க துயின்ற பாவந்தீர்ப்பாய் என்றது

பொருக்குஎன எழுந்து,அடி பணிந்து,அருள் புகழ்ந்தே
அருக்கிய முதல்புரி அருச்சனையி னாலே,
“உருக்கிஎன் வினைத்தொடர் ஒழித்துஅருள்தி” என்றான்;
எருக்குஅணி குவான்இவை எடுத்துமொழி கின்றான். 635

